## <u>ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் சாரதி சேவை தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2026</u>

1. *ஊவா மாகாண சபை அரசாங்க சேவையில் வெற்றிடமாக காணப்படும் சாரதி சேவை தரம் III இன் பதவி வெற்றிட எண்ணிக்கை 18 இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவை கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து 2026.06.26 திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

2. ***ஊவா மாகாண அரசாங்க சேவையின் III ம் தரத்திற்கான பதவிக்கு ஆட்ச்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பொருந்தும்.***

*(அ) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.*

***(ஆ)*** *விண்ணப்பங்கள் பெறப்படும் இறுதித் திகதியன்று வயது* 18 *வருடங்களுக்கு குறைவாகவும்* 45 *வயதுக்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும். (அதன்படி,* 2008.06.26 *அன்று அல்லது அதற்கு முன்னரும்,* 1981.06.26 *அன்று அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த திகதியினை உடையவர்கள் மாத்திரமே இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.)*

*குறிப்பு; தற்பாது அரசாங்க சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறும் நியமனதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.*

***(இ)*** *விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக மற்றும் சிறந்த உடல் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.*

***(ஈ)*** *ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஊவா மாகாணத்தின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும், அப்பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் மற்றும் மனரீதியாகத் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.*

***(உ)*** *விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியிலிருந்து குறைந்தபட்சம் கடந்த* 03 *ஆண்டுகளாக ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவை உடையவராக இருத்தல் வேண்டும், மேலும் கிராம அலுவலரால் வழங்கப்படும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தின் மூலம் தங்களது வதிவை உறுதிப்படுத்த வேண்டும்.*

*(ஊ) கீழே குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளை பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.ன்ன.*

I. *க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியுடன் கூடியதாக திறமை சித்தி இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*குறிப்ப;*

I. *க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு சமனான பிற உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களால் நடத்தப்படும் பரீட்சையில் அமர்ந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகைமையை நியமனமொன்றினை வழங்குவதற்காகப் பயன்படுத்துவது குறித்த இறுதி முடிவை குறித்த கல்வி நிறுவனங்களினால் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோரிடம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு மேற்கொள்ளும்.*

*(எ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

I. *மோட்டார் வாகன ஆணையர் நாயகத்தால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி அனுமதி அட்டையினை பெற்றிருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்பு திகதிக்கு*

